ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

சுத்த ஸாத்விகர்களான தேவர்களும் தங்களுக்குக் கிடைத்த பெருமையெல்லாம் ஸ்வயமாகவே தோன்றியதென கர்வம் அடைந்து தன் கௌரவத்தையே பெரிதாக நினைத்தபோது கருணைக்கடலான கௌரீகாந்தன், ஸாத்விகர்களுக்கு இந்தத் தமோகுணம் தகாதென்று அதனை விலக்க பெரியதோர் சோதிவடிவமாக அந்த தேவர்களுக்கெதிரே தோன்றவே, அந்த ஜ்யோதிஸ்ஸின் உண்மையான ஸ்வரூபமின்னதென்று தெரிந்துகொள்ள புத்திசக்தியின்மையால் இதென்னது என்று திடுக்கிட்டு நிற்கவே அந்த உண்மையைத் தெரிந்துகொள்ள முதன்முதலில் அக்னியையும் பிறகு வாயு முதலியவர்களையும் வரிசையாக அனுப்பவே அக்னி முதலியவர் ஒவ்வொருவராகச்சென்று பார்க்கவே அந்த சோதிவடிவமாக நின்ற பரமேசுவரன் அவர்களை விசாரித்து அவர்களது சக்தியையும் கேட்டு தன் தன் சக்தியையும் பெருமையையும் தேவர்கள் சொல்லவே அதையெல்லாம் தன் முன்னிலையில் ஒரு திருணத்தில் காட்டும்படி கட்டளையிட அதன்படி கிஞ்சிற்றேனும் தன் சக்தியைக்காட்ட ஒருவராலும் முடியாமலும் அந்த வஸ்து இன்னதென்றும் இத்தன்மைத்தென்றும் தெரிந்துகொள்ளாமலும் திரும்பிவிடவே, தேவராஜன் கடைசியாகச் சென்று அந்த சோதியைக் காணக்கூடமுடியாமல் உமாதேவியைச் சரணமடைந்து தேவியின் திருவருளால் அந்த வஸ்துவை உண்மையாகத் தெரிந்துகொண்டு தாங்கள் அடைந்த கர்வமெல்லாம் புத்திமோஹத்தால் என்று தெரிந்துகொண்டு முன்கொண்டிருந்த கர்வத்தை விட்டுப்போட்டு வணக்கமுற்று 'அவனில்லாமல் அணுவுமசையாது' என்ற தீர்மானத்தை அடைந்து தேவர்களுக்கும் அந்த உண்மையை உபதேசித்து அவர்களோடு முன்போலவே ஸாத்விகநிலைமையடைந்தாரென்று சுருதி கூறுகின்றது. தேவர்களுக்கும் இத்தகைய தாமஸ ஸ்வபாவம் வருமாகில் கலியுகத்தில் புறநாட்டுப் புறமதஸ்தர் அரசாக்ஷியில் பிறந்த மானிடர்களுக்கு அத்தன்மை வந்திருப்பதைக் காணும்போது ஆச்சரியப்படவேண்டியதில்லை. ஆகவே ஈசுவராக்ஞையை மாற்றவும் தேவாலயங்களைத் தாக்கவும் தேவபக்தர்களைத் தாழ்த்தவும் அவர்களுக்குத் தோன்றுவதும் ஆச்சரியமில்லை. ஆனால் பரமேசுவரனது ஸங்கல்பத்திற்கு மீறி நடக்க யாருக்கும் சக்தியில்லையென்பதும் அதுஒருநாளும்நடைபெறாதென்பதும்முன்கூறியதேவர்களது வரலாற்றாலேயே தெரியும். ஆகவே தற்காலத்திய சிலர் வைதிகரையும், வைதிகமதத்தையும் இகழ்ந்துபேசி அதை மாற்றிவிடத் துணிந்திருப்பது புத்திமோஹத்தாலென்பது முக்குணங்களின் உண்மையையறிந்த மூதறிஞர்கட்குத் தெரிந்த விஷயமே. அதையே மற்றவர்களும் தீர்மானமாகத் தெரிந்துகொண்டு தேவதேவனது திருவாக்குப்படியே நடந்து ஸகலசிரேயஸ்ஸையும் அடைவார்களாக. சுபம்.

பத்திராதிபர்.

உ

# ஆர்யதர்மம்.

சுக்ல-ஹு மாசி-மீ உகஉ

கோவில்வீராட்டம் ஆர்யதர்மாபிவர்த்தனி பிராமண மஹாஸபைகளின் வருடோற்சவம் 15, 16, 17-2-30 திருக்கோவலூரைச்சார்ந்த கீழூரில் ஸ்ரீ பிரகன் நாயகி ஸமேத வீரட்டஹாஸேசுவரஸ்வாமி முன்மண்டபத்தில் கீழ்கண்டபடி நடைபெற்றது.

## 15-2-1930 சனிக்கிழமை.

காலை 8மணிக்கு, ஷெ ஸபைகளின் வேதவகுப்பைச் சார்ந்தபெரியோர்கள் மாணவர்கள் மற்றும் சபைக்கு விஜயம்செய்திருந்த சாஸ்திரக்ஞர்களால் வேதபாராயணத்துடன் ஸபை ஆரம்பிக்கப்பட்டது.

ஸ்ரீஜகத்குரு சங்கரபகவத்பாதாள் பிரஸாதம் எல்லோருக்கும் விநியோகிக்கப்பட்டது.

ஸபைத்துவக்கத்தில், ஸ்ரீஜகத்குரு. ஸ்ரீமடம் ஆஸ்தானபண்டிதாள் பிர்மஸ்ரீலக்ஷ்மி நாராயண சாஸ்திரிகளவர்கள், குருபக்தி என்ற விஷயத்தைப்பற்றித் தெளிவாக உபந்யஸித்தார்கள்.

வ. சு. நடேசய்யரால் அக்கிராஸனர்பிரேரேணையும் சபையோர் வறவேற்பும் நடைபெற்றது.

பிர்மஸ்ரீ சேஷ-கனபாடிகள், பிர்மஸ்ரீ சுப்ரம்மண்யசாஸ்திரிகள் இவர்களால் அக்ராஸனர் பிரேரேணை ஆமோதிக்கப்பட்டது.

அக்ராஸனர் முன்னுரை உபந்யாஸம்.

சபைக்கார்யதரிசியால் வருஷாந்த அறிக்கை.

பிர்மஸ்ரீ வே. ஸோமதேவசர்மா அவர்கள் பிரேரேணையின் மேல் M. K. ஆசார்யர் அவர்களின் திருத்தத்தை ஆமோதித்து; அவருக்கும் ராஜப்பிரதிநிதிக்கும் தந்தி அனுப்பப்பட்டது.

இத்துடன் காலைஸபை 11 மணிக்கு இனிது முடிவுற்றது.

மாலை 3 மணிக்கு ஸபை ஆரம்பிக்கப்பட்டது.

ஸபைத்தலைவர் பிர்மஸ்ரீ மஹாநர் M. K. கணேசசாஸ்திரிகளவர்கள் முன்னுரை.

பிர்மஸ்ரீ கோபிநாதாசார்யாவர்கள், மத்வஸித்தாந்தம் என்ற விஷயத்தைப் பற்றி நன்கு உபந்நியஸித்தார்கள். ஸ்ரீமான் நியாய சிரோமணி, ஆராவமுதய்யங்காரவர்கள் கோவல் உயர்தரகலாசாலை வடமொழி ஆசிரியர், விசிஷ்டாத்வைதம் என்றதலைப் பின்கீழ் ஓர் அரிய உபந்நியாசம் செய்தார்கள்.

பிர்மஸ்ரீ லக்ஷ்மீ நாராயண சாஸ்திரிகளவர்கள் அத்வைதம் என்றதலைப்பின் கீழ் ஓர் விரிவுரை நிகழ்த்தினார்கள்.

மாலை அநுஷ்டானகாலத்தோடு முதல் நாள் ஸபை கலைந்தது

16. 2. 1930 ஞாயிற்றுக்கிழமை.

காலை 8மணிக்கு வேதபாராயணத்தோடு சபை ஆரம்பிக்கப்பட்டது.

அவைத்தலைவர், பிர்மஸ்ரீ, மஹாநர் K. கணேசசாஸ்திரிகளவர்களால், தலைமைப் பேருரையாக ஸாங்கிய தத்வம் என்ற அரிய பெரும் விஷயம் வெகுவிஸ்தாரமாகவும் தெளிவாகவும் பிரஸங்கிக்கப்பட்டது.

இத்துடன் காலைஸபை 11மணிக்கு இனிது முடிவுற்றது.

மாலை 3 மணிக்கு ஸபை ஆரம்பிக்கப்பட்டது. புதுவருஷத்துக்கு சபைத்தலைவர், உபதலைவர்கள், கார்யதரிசிகள், நிர்வாக அங்கத்தினர்கள் நியமிக்கப்பட்டு அக்கிராஸனர் கையொப்பம் வாங்கப்பட்டது.

ஸபைத்தலைவர் ஸாங்கிய தத்வம், யோகஸித்தாந்தம் என்னும் இவ்விரு பெரும் அரிய விஷயங்களின் ஸூக்ஷ்மங்களைப்பற்றி வெகுதெளிவாய் ஓர் முடிவுரை நிகழ்த்தினர்.

கோவல் உயர்தரகலாசாலை ஆசிரியர் ஸ்ரீமான் K. V. நாராயணஸாமி அய்யரவர்கள் B A L. T. சோதிட ஆராய்ச்சி என்ற தலைப்பின்கீழ் தற்போது பழக்கத்தில் வழங்கிவரும் பல பஞ்சாங்கங்களில் சில புண்ணியகாலங்களை 23 நாட்கள் கதி வித்தியாச

முள்ள இரண்டிரண்டு தேதிகளில் மேஷாயனம் மேஷாதிராசி என்றும் போடப்பட்டு வருவதில் இரண்டும் புண்யகாலங்களா, அல்லவென்றால் எதை புண்ணியகாலங்களாக அனுஷ்டிக்க வேண்டியது என்பதுபோன்ற சில விஷயங்களை நம் மதாசார்யர்களாகிய மடாதிபதிகள் பண்டிதர்களாகிய ஜோதிடசாஸ்திர நிபுணர்களைக் கொண்டு தங்கள் தங்கள் ஆஸ்திகசதாசார வைதிகதர்மானுஷ்டானபார்களான சிஷ்யகோடிகள் செய்துவரும் நித்ய, நைமித்யக, தேவ, பிதிர் சம்பந்தமான சுப புண்ணியகர்மாக்களின் முழுப்பலன்களையும் செவ்வனே அடைந்துய்யுமாறு நன்குஆராய்ச்சிசெய்து, தனி பிரசுரங்கள் மூலமாகவோ, பிரசாரமூலமாகவோ, சத்கர்மாக்கள் அவைகட்குரிய காலங்களில் வழுவின்றி நடைபெற்று வரும்படி நம் ஆர்யஜனசமூஹத்தை அனுக்கிரஹிக்கவேண்டுமென்று ஓர் பிரார்த்தனைரூபமான உபன்யாசம் செய்து சபையோர் எல்லோருக்கும் இவ்விஷயமாய் ஓர் புது உணர்ச்சியையும், ஊக்கத்தையும் எழுப்பி இவ்வாறு சபைக்கு ஓர் பேருதவி புரிந்தார்கள்.

சென்னை அமரகலாவிலாசனிசபை பிரசங்கவர வே. ஸோம தேவசர்மா அவர்கள் ஸ்ரீ பகவத்கீதா ரஹஸ்யம் என்ற விஷயம் எடுத்துக்கொண்டு அவர்கள் வழக்கம்போல் விஸ்தாரமாகவும், விவரமாகவும் உபன்யஸிப்பார்கள் என்று சபையோர் எதிர்பார்த்தபடி விஷயத்தைப்பற்றி விஸ்தரிக்காமல் சபையின் அபிவிருத்தி சம்பந்தமான சில விஷயங்களை நன்கு விளக்கிக்காட்டிவிட்டு முடிவில் பகவத்கீதாரஹஸ்யத்தை முதல் அத்தியாயத்தின் கருத்திற்கேற்ப ஓர் உதாரண கதைமூலமாக எடுத்துக்காட்டி நன்கு முடித்தார்கள். சபை மாலை அனுஷ்டானத்திற்காக இத்துடன் முடிவுற்றுப் பின் 7-மணிக்கு மறுபடியும் கூடிற்று. அக்ராஸனர்முடிவுரையில் ஸனாதன தர்மலக்ஷ்யம் என்ற அவர்கள் விஷயத்தை எல்லோரும் கேட்டு வியக்கும்படி பிரசங்கமாரி பொழிந்து சபையின் இரண்டாம் நாள் கூட்டத்தை இனிது முடித்தார்கள்.

பின் தீர்மானங்கள் 7-கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

1. இச்சபை விவாஹவயது சட்டத்தை மதத்திற்கு செய்யும் பெருந்தீங்கென கண்டிக்கிறது.

2. பிரும்மஸ்ரீ M. K. ஆசாரியா கொண்டுவரும் ஷடி சட்டத் திருத்தத்தை ஆமோதிக்கிறது.

3. ராஜாங்கசபைக்கு போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்ட திவான்பகதூர் T. R. ராமச்சந்திர அய்யரை ஆமோதிக்கிறது.

4. விவாஹசட்டத்தை எதிர்த்து மீறி வழக்கப்படி பெண்களுக்கு விவாஹம் ஏப்ரல் 1-க்கு மேல் நடத்தும்படி மஹாஜனங்களை வேண்டுகிறது.

5. சட்டசபைகளுக்கு மதவிஷயத்தில் தலையிடும்படி எச்சட்டத்தையும் செய்வதில்லை, ஆமோதிப்பதில்லை என்று சத்யம் செய்பவர்களுக்கே வாக்களிக்கும்படி மஹாஜனங்களைபிரார்த்திக்கிறது.

6. வரதக்ஷிணை ஆடம்பர செலவு முதலியவைகளை நிறுத்தி விதிப்படி பலர் ஒன்று சேர்ந்து விவாஹம் செய்யும்படி பிரார்த்திக்கிறது.

7. சென்னையில் நடக்கும் ஸனாதன யுவர் மஹாநாட்டிற்கு இருவரைப் பிரதிநிதியாக தேர்ந்தெடுத்தனுப்புகிறது.

மேற்கண்ட எழு(7)தீர்மானங்களும் சபையோர் எல்லோராலும் ஆக்ஷேபணையின்றி ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டன.

அக்ராஸனர் இன்றிரவே புறப்பட்டுத் தஞ்சை செல்லவேண்டி இருந்ததால் அவர்கட்குப்பிரிவு உபசாரம் கூறப்பட்டுசபை கலைந்தது.

17—2—30 திங்கட்கிழமை.

காலை 8-மணிக்கு வேதபாராயணத்தோடு ஸபை ஆரம்பிக்கப்பட்டது.

கும்பகோணத்திலிருந்து ஸபைக்கு விஜயஞ்செய்த தஞ்சை ஜில்லா பிராம்மணஸபை காரியதரிசி பிர்ம்மஸ்ரீ S. மகாலிங்கய்யர் அவர்களை ஸபையோர் வரவேற்றார்கள்.

பிர்ம்மஸ்ரீ S. மகாலிங்கய்யர் அவர்கள் ஸனாதனதர்மத்திற்காக எடுத்துக்கொண்டுள்ள பெரு முயற்சிகளைப்பற்றி பிர்ம்மஸ்ரீ ஸோமதேவசர்மா அவர்கள் எடுத்துரைத்தார்கள். ஸபைக்கு ஸ்ரீமடம் ஆஸ்தானபண்டிதாள் பிர்ம்மஸ்ரீ லக்ஷ்மீநாராயணசாஸ்திரிகளவர்கள் அக்ராஸனம் வகித்தார்கள்.

பிரும்மஸ்ரீ S. மகாலிங்கய்யரவர்கள் தற்போது உள்ள ஸனாதனவைதிகதர்மநிலையின் குறைவுகளையும் அவற்றை நிவர்த்திக்க பிராம்மண்மஹாஸபைகள் பல தோன்றிச்செய்யவேண்டிய வேலை

கள் இன்னின்ன என்பவற்றையும் வெகு தெளிவாயும் விஸ்தாரமாயும் நன்கு விளக்கிக்காட்டினார்கள். இத்துடன் காலை ஸபை முடிந்தது.

மாலை கோவல் ஸ்ரீ புஷ்பாலயாஸமேத தேகளீசர்சன்னிதி முன்மண்டபத்தில் ஸநாதனதர்மாசக்ஷணம் என்ற விஷயத்தை பிர்ம்மஸ்ரீ S. மகாலிங்கய்யாவர்கள், பிர்ம்மஸ்ரீ ஸோமதேவசர்மா அவர்கள் தலைமையின்கீழ் உபன்யஸிப்பதாகத் துண்டுப்ரசுரம் வெளியிடப்பட்டது.

மாலை 4-மணிக்கு லக்ஷ்மீநாராயணசாஸ்திரிகள் அவர்கள் தலைமையின்கீழ் ஸபை கூடிற்று.

ஸபையின் உபதலைவர் பிர்ம்மஸ்ரீ சேஷாகனபாடிகள் ஸபை சார்பாக சில விஷயங்களைத் தெரிவித்துக்கொண்டார்கள். அதின் பின் அக்கிராஸனர் முடிவுரை கூறினர். பிர்ம்மஸ்ரீ ஸோமதேவ சர்மா அவர்கள் ஸபைக்கு விஜயஞ்செய்து உபன்யஸித்த பெரியார்களுக்கு ஓர் வந்தனோபசாரம் கூறினார்கள், பின்னர் ஸபை காரியதரிசி பிர்ம்மஸ்ரீ K. R. சுப்பிரமணியசாஸ்திரிகளவர்கள் இந்த ஸபை சென்ற சில வருஷங்களாக வேலைசெய்துவருவதற்கு ஸூத்திரதாரியாகத்தான் சென்னையிலிருந்துகொண்டு இங்கே எங்களெல்லோரையும் இவ்வழியில் தொழில்படுத்திவருபவர் பிர்ம்மஸ்ரீ ஸோமதேவசர்மாவே என்பதை ஸபையோருக்குத் தெரிவித்து அவர்களுக்குத் தனியாக ஸபையின் சார்பாய் நன்றி பாராட்டினார்கள். பகவத்பிரார்த்தனையுடன் ஸபை நிறைவேறிற்று.

இரவு 7-மணிக்கு திருக்கோவலூர் ஸந்நிதி முன்மண்டபத்தில் ஸபை கூடிற்று. பிர்ம்மஸ்ரீ T. S. ராமச்சந்திரய்யாவர்கள் ஸபைத்தலைவராக பிர்ம்மஸ்ரீ ஸோமதேவசர்மாவைப் பிரேரேபிக்க பிர்ம்மஸ்ரீ C. V. நாராயணஸாமி அய்யாவர்கள் ஆமோதிக்க எல்லோரும் கரகோஷத்தினிடையே சபை ஆரம்பிக்கப்பட்டது.

அக்கிராஸனர் பிர்ம்மஸ்ரீ ஸோமதேவசர்மா பிர்ம்மஸ்ரீ S. மகாலிங்கய்யாவர்களை ஸபையோருக்கு அறிமுகப்படுத்தி அவர்கள் எடுத்துக்கொண்டுள்ள ஸநாதனதர்மஸம்ரக்ஷணம் என்ற விஷயத்தைப்பற்றி அவர்களை உபந்யஸிக்கக் கேட்டுக்கொண்டார்கள்.

உபந்யாஸநடுவில் ஸபையிலிருந்து ஒருவரால் சில கேள்விகள் ஒழுங்கின்மையாய்க் கேட்கப்பட்டபோதிலும் உபந்யாஸகரால் மிக்க மரியாதையுடனும் நிதானத்துடனும் எல்லோரும் கேட்டு ஆச்சரியப்படும்படி தகுந்த பதில் சொல்லப்பட்டு அக்கிராஸனர் பின்னுரையுடனும், பகவத்ப்ரார்த்தனையுடனும் ஸபை இனிது முடிந்தது. சுபம். காரியதரிசி.

---

# இது ஒரு பயமுறுத்தலா.

(58-வது பக்கத்தொடர்ச்சி)

இனி மதத்திற்குக் கெடுதல் என்பது என்னவென்பதை யாவது தெரிவித்தாரா? இனி அதைத் தெரியப்படுத்த ஆரம்பித் தால் ஆர்யஸமாஜ ரகஸ்யத்தைத்தான் கொட்டவேண்டும். இல்லை யேல் பரம ஆபத்தான இச்சாரதாசட்டத்தை நல்லதென ஒருக்கா லும் துணியமுடியாது. இன்னொன்றும் கேட்போம். அய்யங்கா ரவர்கள் இருந்தால்தான் பாடுபடுவாரென்கிறார். இதுவரை அய் யங்காரவர்கள் பட்டபாட்டால் யாவரும் எளிதில் அடைந்த பயன் யாது? வ்யவசாயம் கைத்தொழில் வியாபாரம் இவைகளுக்குத் தான் ஆபத்து வந்திருக்கிறதென்கிறார். இவைகளுக்கு என் றையதினம் ஆபத்து ஆரம்பித்தது. சாரதாசட்டம் இந்துமதத்தை இன்ன தேதி முதல் நாசஞ்செய்யப் போகிறதென்று சொல்வது போல் இதற்குக் காலவரை குறித்துக் காட்டவில்லையே. வெகு நாளாய் இருக்கிறதென்றால் அய்யங்காரவர்கள் இது நாள் வரை வேலை செய்து கைத்தொழில் வகையறாக்களில் என்னென்ன நன்மை செய்துள்ளார். அது ராஜாபகதூரால் நடத்த முடியாதா? ராஜாபகதூர் நிலமில்லாதவரா? நிலம்முதலியவைகளின் வரியை ஏராளமாய்ப்போட்டுக் கொள்ளுங்கள். சாரதாசட்டத்தை மட் டில் மாற்றினால் போதுமென்று கேட்டுவிடுவாரென்ற சந்தேகம் கிளம்பிற்றோ? ஏதோ மிராசுதாரவர்கள் நியாயமின்றி எழுதுவ தாய் நினைக்கவேண்டியிருக்கிறது. பலருக்கும் அபிப்ராயம் பல வேறாக இருக்கலாம். அதைப்பற்றி ஒருவரை ஒருவர் கண்டிக்க முடியாது. ஆனால் எல்லோரும் சேர்ந்து ஒரு காரியத்தை நடத்த நேரிட்டால் அப்போது ஒவ்வொருவரும் கொஞ்சம் கொஞ்சமே னும் தன் தன் அபிப்பிராயத்தை இறக்கிக் கொடுத்தால் தான்

சேர்ந்து அக்காரியத்தை ஸாதிக்கலாம். அதுபோல் தேச க்ஷேமத்தை அடைய பற்பல வேறு அபிப்பிராயமுள்ள பல சபைகளை ஒன்றுசேர்க்கவேண்டும். அப்படியே ஸநாதனதர்மிகளும் கொஞ்சம் விட்டுக்கொடுக்கவேண்டும். காங்கிரஸ்ஸும் விட்டுக்கொடுக்கவேண்டும். அப்படிச் செய்யாவிடில் ஒரு கோஷ்டியாரும் தனித்து நின்று ஒரு கார்யம் செய்யமுடியாது என்பதை ஸ்ரீமான் அய்யரவர்களறிந்து சமயத்துக்குத் தக்கவாறு அநுஷ்டிக்கவேண்டியதை ஸமரஸமாய் கவனித்து எழுதுவாராக.

M. N. சுப்பிரமணியசாஸ்திரி,
மதுரை.

---

# வைதிகவைபவம்.

ஆர்யர்களே! கலியின் கோலாஹலம் எங்கும் வியாபித்திருக்கின்றது என்று பயந்து தாங்கள் கவலைகொள்ளவேண்டாம். பற்பல மதத்தாரோடு சேர்ந்து உண்பது, உறங்குவது சம்பந்தஞ் செய்வது வேதாக்ஷரத்தைச்சிறிதேனும் குக்ஷியில் தரிக்காதவர்களோடு பழகுவது கைபிடித்த மனையாளைவிட்டுவிட்டு பணப்பேய் பிடித்து, சாஸ்திரத்தால் விலக்கப்பட்ட தூர்தேசங்கள் சென்று துர்மார்க்கங்களையேகருதுவது, தலைமயிர்களைக்கத்திரித்து ஒழுங்கு பண்ணி வாரிக்கொள்வதில் காலங்கழிப்பது, ஸந்தியாகாலங்களில் நாடகாதியான மாயாவலையில் அகப்பட்டு காலத்தை ஈகமாய்கழிப்பதுபோல் நினைப்பது, பிராம்மணநிந்தை, தெய்வநிந்தைமுதலான பாபகார்யங்களில் முயல்வது முதலான எண்ணிறந்த செய்கைகளால் எவ்விதத்தாலும் நாஸ்திகர்களால் வர்ணாசிரமதர்மத்தை அழித்துவிடமுடியாது.

கலியுகத்தில், கிருதயுகத்தின் தர்மங்கள் பூராவாக நடைபெறா என்பது வாஸ்தவமானாலும் நூற்றில் ஒருவராவது வேதமார்க்கத்தை சாவதானமாய் நிலைநாட்டி அநுஷ்டித்தே வருவார் என்பதில் ஐயமில்லை. பகவானே வர்ணாசிரம தர்மங்களை அமைத்திருப்பதால் முற்றிலும் அவைகளை அழித்துவிட யாவராலும் சாத்தியமாகாது. ஆகையால் சிறிதேனும் சாஸ்திராப்யாஸத்தாலும், அநுஷ்டிப்பதாலும் நமது பண்டைய வைதிகமதத்தை நிலைநாட்டுகின்றவரின் வைபவம் யாவராலும் போற்றத்தக்கதே.

அவ்விதமான வைதிகர்களே கஷ்டங்களைப்பொறுத்து, மேம்பட்ட நிலைமையைப் பெறச் செய்து ஏனையோரையும், வைதிக வழியிலேயே நடைப்படுத்த சக்தி வாய்ந்தவர்கள். ஸத்தியமே முடிவில் ஜயம் பெறும். அஸத்தியமான வழிகள் மேல்பார்வையில் இன்பசாதனங்களாகத் தோன்றினும் முடிவில் கேடுகளை விளைவிக்கவே காரணமாகும். ஆகையால் ஸசாதனமான வழியில் பற்றுள்ள ஆஸ்திகர்களே! வைதிகர்களின் பிரமாணமுள்ள நல்வழியிலேயே உறுதியானஎண்ணத்தைக்கைகொள்ளுங்கள். ஆரம்பத்தில் சிரமமாகத் தோன்றினும் வைதிகர்களின் கொள்கை முடிவில் அழிவில்லாத நித்திய நிரதிசயமான பேரானந்தத்தை விளைவிக்கும்.

இக்கலியில் வைதிகர்கள் சிலர்கள் தானே, அவர்களால் என்ன தான் ஆகக்கூடும் என்று எண்ணவேண்டாம். மருஸ்தலத்தில் (நீரகப்படாத தேயத்தில்) சிறிது தீர்த்தத்தோடு கூடின தடாகமும் போற்றத்தக்கதே. காலக்கிரமத்தில் நல்லாரின் முயற்சியால் அத்தடாகத்தில் மழைபெய்து பூர்ணமான தீர்த்தம் பெருகும் என்பதில் ஐயமில்லை.

விச்வகுணாதர்ச காவ்யத்தில் கிருசானு என்ற தூஷகனால் தூஷிக்கப்பட்டவைகளுக்கு விச்வாவஸு என்ற குணக்ராஹியால் உரைக்கப்பட்ட விடையால் பிராம்மண்ணியத்தை நிலைநாட்டினவர்களுக்குப் பெருமை கூறப்பட்டிருக்கிறது.

சுமார் முந்நூற்றைம்பது வருஷங்களுக்கு முன் அக்காவ்யம் ஏற்பட்டது. அக்காலத்திலேயே பலர் இந்த இந்தியாவில் புகுந்து, கொடூரமான மனதுடன் ஈர இறக்கமென்பது நெஞ்சில் சிறிதேனுமில்லாமல் பிராம்மணர்களையும், பிராம்மண தர்மங்களையும், தெய்வங்களையும், அழிக்கத்தலைப்பட்டனர். அக்காலத்திலும் நம் முன்னோர்கள் அக்கொடிய ராஜாக்களிடம் பலவாறு தொண்டுபுரிந்து நமது தர்மங்களைப் பாடுபட்டு இதுகாறும் காப்பாற்றியிருக்கின்றனர். அவர்கள் "காயஸ்தாள்" என்று சொல்லப்படும் கணக்குவேலைகளிலும் பிராம்மணுளுக்கு அர்ஹமாயல்லாததாயினும் ஆபுத்கல்பமாக "சஸ்திரதாரிகள்" போர்வீரர்களின் உத்தியோகங்களிலும், பற்பலவிதங்களான துறைகளிலுமிருந்து மன்னர்களைப் பின்பற்றி பிராம்மணர்களையும் தெய்வங்களையும் ரக்ஷித்தி

ருக்கின்றனர். அவர்கள் அக்காலத்தில் அவ்வாறு பாடுபட்டுரக்ஷிக்காமல் தங்கள் வீடுகளிலேயே இருந்து நலத்தையேகருதியிருப்பார்களானால் இப்பூமியில் உள்ள அறிஞர் யாவரும் பிராம்மண்ணியம் என்பதற்கு ஜலாஞ்ஜலி கொடுக்கவேண்டியதாயிருக்கும்.

ये कायस्थजनाश्च ये नृपसुता येच द्विजाः शस्त्रिणः
ते यत्नादनुसृत्य निर्दयतया शुष्कांस्तुरुष्काधिपान् ।
देवान्भूमिसुरांश्च पान्ति कृतिनस्तेचेत् गृहेष्वासते
ब्राह्मण्याय जलाञ्जलिः किलभुवि प्राज्ञैः प्रदेयो भवेत् ॥

என்று செய்யுளால் மேற்கூறிய கருத்து வெளியாகிறது.

வேதங்களையும், வேதங்கற்று அதன்படி ஒழுகும் பெரியோரையும், நிந்திக்க என்ன தைர்யத்தாலோ பலரின் நாக்கு எழும்புகின்றது? உலகத்தில் தூஷணம் என்பது யாருக்குமே தகாது? ஆனாலும் ஸன்மார்க்கத்தில் இடையூறாயிருப்பவர்களைத் திருத்துவதற்காக அதனாலுண்டாகும் தீமைகளை எடுத்துக்காட்டி நல்வழிப்படுத்துவதற்காகக் கூறுவது தூஷணமாகாது என்பது அறிஞர்களின் கொள்கை.

ஆகையால் வைதிகநெறியில் உள்ளவர்களின் மஹிமையை உணராமல் திட்டத் தலைப்படுகிறவர்கள், தங்கள் கோரிக்கையையும் பெறாமல் வீணாக நரகத்திற்கே பாத்திரமாகின்றார்கள். அம்மாதிரி அவர்கள்ஜன்மாக்களைவீணாக்கிக்கொள்ளாமல் ச்ரேயஸ்ஸை அடையச் செய்தவருக்கே நல்லோர் நியாயங்களை வேதப்பிரமாணத்தால் உபதேசிக்கின்றனர்.

இந்தப் புண்ணியமான பாரதபூமி ஸேதுமுதல் பனிமலைவரையும் யவனர்களால் வந்து சூழப்பட்டபோதும், ஜாதி க்ஷத்திரியர்களின் 'கூட்டம்' எங்கேயோ ஓடிவிட்டபோதும், திருமாலும் கருணையற்று துயிலும்போதும், கலியும் இடையூறில்லாமல் பரவும்போதும், அவ்விடையூறுகளைக் களைந்து வைதிகமார்க்கத்தை அங்கங்கு ஒவ்வொரு லோகோத்தமர்களான சில மஹான்கள் பாதுகாத்தே வருகின்றனர்.

आक्रान्तासु वसुन्धरासु यवनैरासेतुहैमाचलं
विद्राणे क्षितिभृद्गणे त्रिकरुणे निद्राति नारायणे ।

निर्विघ्नप्रसरे कलावपि बलान्निष्कण्टकं वैदिकं
पन्थानं किल तत्र तत्र परिपात्येकोहि लोकोत्तरः ॥

என்ற ச்லோகத்தை உற்றுநோக்கும்போது வைதிகர்களின் வைபவமே சாலப்போற்றக் கூடியதாகும். ஆபத்காலங்களிலும் ஒரே மனதுடன் தர்மானுஷ்டானஞ் செய்பவர் எவ்வாற்றானும் மேம்பட்டவரே.

உலகில் உன்னதமான கதியை, அதாவது— மோக்ஷத்தை அடையவேண்டுமானல் தர்மத்தாலே தான் ஆகும். அந்த தர்மமும் அபௌருஷேயமான வேதத்தால் தான் அறியப்படவேண்டும். அந்த வேதத்தைப் பிரகாசப்படுத்துவதற்கும் பிராம்மணர்களால் தான் சாத்தியமாகும். ஆகையால் நம்போன்றவரின் நமஸ்காரம் அவர்களைத் தவிர வேறு யாரிடத்தில் போய்ச் சேரும் என்றார் போஜராஜனும்.

மஹாபாரதாதிகளான இதிஹாஸங்களும், வேதத்தையும் வேதத்தையறிந்த பிராம்மணர்களையும், உலகிற்குமூலகாரணமாகக் கூறுகின்றன. ஆகையால் இச் சிறுவியாஸத்தால் வெளியிடுவதின் ஸாரம் யாதெனில்? வைதிகர்களின்வைபவமே போற்றத்தக்கது.

அவர்களின்மொழியே ஈச்வராக்ஞையாகும். ஆகையால் யாவரும் வேதியர்களின் பிரமாணமொழியைப் பின்பற்றி ச்ரேயஸ்ஸைத்தரும் வைதிகமார்க்கத்தை நிலைநாட்டுவோமாக.

கே. வி. சுப்பிரமணியசாஸ்திரி.

---

# வேதபாராயணம்.

ஆஸ்திகர்களே! இதை நான் சொல்லஆரம்பிப்பதில் சிர்திருத்தக்காரர்கள் சிரிப்பரிஹஸிப்பார்கள் என்பது தெரியும். ஆனல் அவர்களுக்காகப் புண்யமான செய்கையைச்சொல்லாமல்விட்டால் ஆஸ்திகர்கட்கழகல்லவென்று ஆரம்பிக்கிறேன்.

बौद्धैरिव श्रुतिरहो बत निन्द्यते सा ।

என்று ஸ்ரீராமர் பிராட்டியை நிந்திப்பவர்களைக் கூறுமிடத்துப் புண்யமான வேதம் பௌத்தர்களால் நிந்திக்கப்படவில்லையா என்கிறார். அதுபோல் பிரகிருதமும் என்றுகொண்டு விஷயத்திலிறங்குவாம். ஸ்ரீ ஹாலாஸ்யபுரியான மதுரையில் நமக்கேற்பட்டிருக்கும் விவாஹப்பிரதிபந்தகச்சட்டத்தைப் பரமகருணாமூர்த்திதான் விலக்கவேண்டுமென்ற நிச்சயம்கொண்ட வைதிகோத்தமர்கள் சென்ற நவராத்திரியிலேயே ஸ்ரீ மீனாம்பிகையின் ஸந்நிதியில் ஸுவர்ணபுஷ்கரிணீதடத்தில் ஸங்கல்பபுரஸ்ஸரமாய் வேதபாராயணத்தை விதிப்படி ஆரம்பித்தனர் என்பதை விவரமாய் அச்சமயமே கூறியுள்ளேன். பிரதிதினமும் ஸாயம்ஸந்தியாவந்தனாதிகன்மங்களை முடித்துக்கொண்டு ஆரம்பித்து 2-மணிநேரம் சுமார் 80-பெயர்களுக்குக் குறையாமல் இரண்டுவரிசையாய் உட்கார்ந்து உயர்ந்த தொனியோடு சர்ச்சை முறையாய்ப் பாராயணம் செய்கிற அத்தொனியைக்கேட்டுச் சற்றுநேரமாவது பிரமித்துநிற்காத ஆஸ்திகன் இல்லையென்று சொல்வது அதிசயமாகாது.

हविर्गन्धो गवांरेणुर्वेदानां ध्वनिरेव च ।
अपि गोदोहमात्रेण सर्वपापं व्यपोहति ॥

ஹவிஸ்ஸின் பரிமளமும் பசுக்களின் கால்துளியும் வேதத்தொனியும் மாடுகறக்கும் நேரத்திற்குள் ஸமஸ்த பாபத்தையும் விலக்கிவிடும் என்ற மகரிஷிவாக்கியம் ஸத்யமென்பது யாவருக்கும் புலப்படுகிறது. வேகமில்லாமல் அக்ஷரம் ஸ்வரலோபமில்லாமல் வைதிகோத்தமர்கள் கானம்செய்வதைப்பார்க்கும் பிராமணர் பிராமணரல்லாதார் யாவருமே இதுவே தவம் என்றும் இத் தவத்திற்குப் பரமதயாளு இறங்குவாரென்று நினைக்கிறார்கள். ஓர்புறம் யாஜுஷர்களது கோஷம், மற்றோர்புறம் ஸாமகர்களது கானம். அதையடுத்துப் பாடசாலையில் வேதம் கற்கும் மாணாக்கர்களது பாராயணம். இவ்வளவு அழகிய வேதஸ்துதிக்கு லோகமாதாவாகிய மீனாம்பிகை கட்டுப்படாமல் எவ்வளவுநேரமிருக்கமுடியும்? எந்தப் பலனையேனும் விரும்பி வேதத்திலிருக்கும் ஓர் அக்ஷரமான பீஜத்தை ஜபித்தால் அதற்கே தேவதை வசப்படுவதை நாம் அனுபவிக்கிறோம்.

(தொடரும்)

M. N. சுப்பிரமணியசாஸ்திரி,

களுக்கும், விஹிதகாலத்தில் விவாஹத்தையடையாமலிருந்தால் தோஷமுண்டென்று விதிக்கப்பட்டிருக்கிறது. அதாவது ஸ்திரீகள் விவாஹத்தையடையாமல், தகப்பன் வீட்டிலேயே ருதுவாகிவிடும்பக்ஷத்தில், அவர்களுடைய தகப்பனுக்கு ப்ருணஹத்தி என்னும் பாபம் ஸம்பவிக்கும். அவர்களும் விருஷளஜாதிகளாவார்களெ" ன்று தோஷம் விதிக்கப்பட்டிருக்கின்றது. இவ்விஷயத்தைப் பின்பு விஸ்தாரமாக விசாரிப்பாம். ஆகையால் புருஷர்களைப் போல் பிராமணஜாதி ஸ்திரீகளுக்கும், விவாஹம் காம்யந்தான் என்று சொல்வது தவறேயாகும், அவர்களுக்கு விவாஹமென்ற ஸம்ஸ்காரத்தை செய்விக்காமலிருக்கும் பக்ஷத்தில், "பிராமண ஜாதி" என்பதே ஸித்திக்கமுடியாததால், தமது ஜாதியினின்றும் நழுவிவிடும்படி நேருமன்றோ ? அப்படியே விவாஹம் செய்து கொள்ளாமலிருக்கும் ஸ்திரீகளுக்கும், அதற்குக்காரணமாகவிருக்கும் தாய் தந்தை முதலியவர்களுக்கும் தர்மசாஸ்திரங்களில் தோஷமும் விதிக்கப்பட்டிருக்கின்றதன்றோ ? இவ்விருகாரணங்களாலும் ஸ்திரீகளுக்கு விவாஹம் நித்யந்தான், காம்யமல்லவென்று அவசியம்அங்கீகரிக்கத்தான் வேண்டும்.

இவ்விஷயத்தில் தற்காலத்திய நவீனமேதாவிகளின் கல்பனை விசேஷமாவது— ஸ்ரீமகாபாரதத்தில்!அனேக ரிஷிகன்யகைகள் விவாஹமில்லாமலேயே வெகுகாலம் தவம்புரிந்துவந்ததாக இதிஹாஸம் அனேகம் இருக்கின்றது. ஸ்திரீகளுக்கு விவாஹம் நித்யந்தானென்று சொல்லும்பக்ஷத்தில் அப்படிப்பட்ட நித்ய விவாஹத்தை அவர்கள் என் செய்துகொள்ளாமலேயே தவம் புரிந்தார்கள்? அவர்களுக்குத் தந்தைகளாகவும் ஸர்வக்ஞர்களாகவும் இருக்கும் மகரிஷிகளுந்தான் தர்மாதர்மங்களை நன்குணர்ந்தவர்களாகவிருந்தும் என் இவ்வித காரியங்களில் பயத்தையடையவில்லை ? மகாபாரதத்தில் சல்யபருவத்தில் 'ஸாப்ரு' என்று ஒரு ரிஷிகன்யகை வெகுநாட்கள் விவாஹம் இல்லாமலே இருந்து கிழவயதில் விவாஹம் செய்துகொண்டதாக ஒரு சரித்திரமும் உண்டு. இவ்விதமெல்லாம் நமது முன்னோர்களின் சரித்திரம் விசித்திரமாக இருப்பதற்கு என்ன காரணம் ? இப்படிப்பட்ட சரித்திரமெல்லாம் சாஸ்திரீயமில்லையென்று சொல்லும்பக்ஷத்தில் சாஸ்திரீயமில்லாத இத்தகைய அபசரித்திரங்களை எதற்காக வ்யாஸபகவான் தமது கிரந்தத்தில் விரிவாக எடுத்துக்

கூறினரோ தெரியவில்லை. இவ்வியாஸாசாரியர் இத்தகைய அப சரிதங்களடங்கியிருக்கும் இம்மஹாபாரதம் முதலிய கிரந்தங்களை இயற்றுவதைவிட வேறு காரியங்களைச் செய்திருந்தால் நன்றா யிருக்குமே? ஆகவே மஹாபாரதத்திலிருக்கும் இந்த ஸ்த்ரீ சரித் திரம் சாஸ்திரீயமில்லை என்று எப்படிச் சொல்லமுடியும்? ஆதலால் அச்சரித்திரத்திலிருந்து ஸ்திரீகளுக்கு விவாஹம் காம்யமென்று தான் புலப்படுகின்றதேயன்றி நித்யமென்று புலப்படவில்லை. அக் காரணத்தால் ஸ்திரீகள் யாவருக்கும் முன்காலத்தில் விவாஹம் காம்யமாகவேதான் இருந்ததாக ஒப்புக்கொள்ளவேண்டும். விவா ஹம் செய்துகொள்ளாமல் ஸ்திரீகள் இருக்கலாகாது. ஸ்திரீ களுக்கு ஒருவனைக் கணவனாக விவாஹம் செய்துவைக்கவேண் டியது அவசியமென்ற பிடிவாதமிருக்குமேயானால் ருதுவான பின்புதான் அதைச் செய்யவேண்டுமேயொழிய முன்பு செய்ய லாகாது—என்று.

இவைகளுக்கு ஸமாதானமாவது—

1. மகாபாரதத்தில் சில ரிஷிகன்யகைகள் விவாஹம் செய்து கொள்ளாமல் தவம்புரிந்துவந்ததாக சரித்திரமிருக்கின்ற விஷயம் உண்மைதான். ஆனால் இப்படிப்பட்ட சிலசரித்திரங்களைக்கொண்டு இவ்வண்ணமாகவே முற்காலத்தில் எல்லாவிடங்களிலும் யாவரா லும் விவாஹம் காம்யமாகவே அனுஷ்டிக்கப்பட்டதென்றெப்படி நிர்ணயிக்கப்பட்டதோ? சில ஸ்திரீகள் விவாஹம்செய்துகொள்ள வில்லையென்ற சரித்திரத்தால் முற்காலத்தில் எல்லா ஸ்திரீகளும் அவ்வாறே இருந்தார்களென்று எப்படி அறியக்கூடும்? ஆதலால் ஸ்திரீகளுக்கு விவாகம் காம்யமென்பதற்கு இந்த சரித்திரம் பிரமாணமாகமாட்டாது.

2. மகாபாரதத்திலிருக்கும் இச்சரித்திரம் ஒரு ஸ்திரீயி னுடைய உபாக்யானரூபமாத்திரமேயன்றிவிதிவாக்கியரூபமன்று. உபாக்யானங்களோ ஒருவனுடைய ஜீவிதசரித்திரத்தைமட்டிலும் உண்மையாக நடந்துவந்தபடி அறிவிக்குமேயன்றி அச்சரித்திர தைத் தர்மமென்றோ அல்லது அதர்மமென்றோ நிரூபணம்பண்ணு வதிலும் ஸாமர்த்தியமுள்ளவைகளல்ல. தர்மாதர்மங்களிலோ விதிவாக்கியத்துக்குத்தான் பிராமாண்யமுண்டு. இத்தகைய உபாக்யானங்களால் வெளிப்படும் சரித்திரமெல்லாம் மகாபுருஷர்

களைப்பற்றியதாக இருந்தாலும் சாஸ்திரவிதியை மீறாமல் அநுஸரித்திருக்குமேயானால் பிரமாணமாக எடுத்துக்காட்டக்கூடுமேயன்றி சாஸ்திரவிதியை மீறியும் அநுஸரிக்காமலுமிருக்கும் சரித்திரம் பிரமாணமாக ஸ்வீகரிக்கத்தக்கதல்ல. இவ்விஷயத்தில் சரித்திரநாயகனுடைய குறைகுணங்களையும் கௌரவாகௌரவங்களையும் கவனிப்பதில்லை. உலகத்திலுங்கூட 'லஞ்சம் வாங்குதல்' முதலிய நீதிசாஸ்திரவிருத்தமாயிருக்கும் லௌகிககாரியங்களை பெரிய மனுஷ்யர்கள்” அநுஷ்டித்துவந்தபோதிலும் நீதிசாஸ்திரத்திற்கு விரோதமாயிருப்பதுபற்றி அவைகளை தீயச்செயல்களாகத் தள்ளிவிடுகிறோமென்றால் மிக ஸூக்ஷ்மமாகவும் சுருதிஸ்மிருதிகளால் மட்டும் அறியக்கூடியதுமாகிய தர்மகார்யங்கள் சாஸ்திரவிரோதமுள்ளவையாகவிருந்தால், அங்கீகரிக்கத்தக்கதல்லவென்பதைச் சொல்லவும் வேண்டுமோ. இவ்விஷயத்தை சிஷ்யாநுசாஸனரூபமாகப் பிரவர்த்தித்திருக்கும் தைத்திரீயோபநிஷதமும் "சாஸ்திரவிதியை அநுஸரித்திருக்கும் பூர்விக நற்சரித்திரங்களையே நீங்கள் உபாஸிக்கக்கடவீர்கள். மற்றவைகளையல்ல" என்று ஸ்பஷ்டமாய் தெரிவித்திருக்கின்றது. சாஸ்திரவிதியை அநுஸரித்திருக்கும் சரித்திரத்தைத்தவிர மற்றவைகளைப் பிரமாணமாக அவலம்பிக்கக்கூடாதென்று ஸ்மிருதிகளிலும் பிரஸித்தம். ஆகையால் இத்தகைய சில ரிஷிகன்யகைகளின் சாஸ்திரவிருத்த சரித்திரங்களைப் பெரிய பிரமாணமாக உதாஹரித்துக்கொண்டு சாஸ்திரங்களில் நித்யமென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கும் ஸ்திரீவிவாஹத்தைக்காம்யமென்று மாற்றிவிடுவது ஸரியல்ல.

3. ஸ்திரீவிவாஹம் நித்யமாயிருக்குமேயானால், ஷடி ரிஷிகன்யகைகளின் பெற்றோர்களாகிய, மகரிஷிகளும் ஸர்வக்ஞர்களாக இருந்தும், தன் பெண்களுக்கு ஏன் அந்த நித்திய விவாகத்தை செய்விக்காமல் தைரியமாகவே இருந்தார்கள் என்று பூர்வபக்ஷிகள் சொல்லுவதும் சரியல்ல. ஏனெனின் அப்பெண்களுக்கு விவாஹம் செய்விக்கும் விஷயத்தில், பெற்றோர்கள் பிரவர்த்திக்காமல் இருந்ததாக அச்சரித்திரத்தில் காணவேயில்லை. ஆனால் அவர்கள் தன் பெண்களுக்கு விவாஹம் செய்விப்பதற்காக, பலவிதமாகப் பிரயத்தனப்பட்டும், அப்பெண்ணின் விவாகம்செய்துகொள்வதில்லை என்றபிடிவாதத்தால், அது நிறைவேறவில்லை என்றுதான் அந்த ஸாய்ருபாக்யானத்திலிருந்து வெளியாகிறது. அதா

வது "ஸுப்ரூவானவள் தகப்பனால் விவாஹம்செய்விப்பதாக நிச்சயிக்கப்பட்டிருந்தாலும் ஒருவனையும் அவள் விரும்பவில்லை" என்ற மகாபாரதத்திலிருக்கும் அச்சரித்திரவசனத்தால் ஸுப்ரூவின் பிதா தமது பெண்ணுக்கு விவாஹம் செய்விக்கும் விஷயத்தில் பிரவர்த்தித்தும் அவளுடைய பிடிவாதத்தால் முடியவில்லையென்றல்லவா? புலப்படுகின்றது. ஆகையால் மகரிஷிகள் "ஸ்திரீகளுக்கு விவாஹம் செய்விப்பது தந்தையின்கடமை" என்றநியமத்தை ஒருபோதும் தவறிவிட்டார்கள் என்பதில்லை. எனவே தன் பெண்ணுக்கு விவாஹம் செய்விக்காமல் மகரிஷிகள் என் உதாஸீனமாக இருந்தார்களென்ற பிரச்னம் செய்வதற்கு அவகாசமில்லை

(4) அன்றியும் ஸுப்ரூவுங்கூட பூர்வபக்ஷிகளபிப்பிராயப்படுவதுபோல் "தனக்கு விவாஹம் அவசியமில்லை"யென்று நினைத்துக்கொண்டு தந்தையின் தானத்தைத் தடுக்கவில்லை. ஆனால் குலம், சீலம், ரூபம், வயது இவை முதலிய நற்குணங்கள் நிரம்பியிருக்கும் கணவன் தனக்குச் சமானமாக ஒருவருமில்லையென்ற எண்ணத்தால் தான் தந்தையின் தானத்தைத் தடுத்தாள். இவ்விஷயமுங்கூட அச்சரிதவிமர்சத்தாலேயே நன்கு விளங்குகின்றது. அதாவது "அவள் தனக்கு அனுரூப குணசீலனாக ஒரு கணவனையும் நினைக்கவில்லை" என்ற இவ்வசனமிவ்விஷயத்திற்கு ஆதாரமன்றோ? இவற்றால் விவாஹம்செய்துகொள்ளவேண்டியது தனக்கு மிகவும் அவசியமாயிருந்தபோதிலும் தன்னிஷ்டப்படி ஸகல ஸத்குணஸம்பன்னனாகவிருக்கும் கணவனையடையவேண்டுமென்ற காமாவேசத்தாலேயே அவள் அதை மறுத்துவிட்டாள். அவளுக்கு "ஸ்திரீகளுக்கு விவாஹமென்பது அவசியமில்லை" என்ற எண்ணம் எள்ளளவுமில்லை. ஸ்ரீபகவத்கீதையில் காமமூலமாக ஆசரிக்கப்படும் காரியங்களை ராஜஸமென்று சொல்லியிருப்பதால் காமனாமூலமாகவிருக்கும் ஸுப்ரூவினுடைய பிடிவாதநடத்தையும் எப்படி வேதத்தில்கூறிய தர்மமாக அங்கீகரிக்கத்தகும்? வேதவேதாங்கங்களை நன்குணர்ந்திருக்கும் சிஷ்டர்களால் தர்மம் என்ற பாவனையுடன் அனுஷ்டிக்கப்படும் ஸாத்விகாசாரத்தையல்லவா ப்ரமாணமாக ஒப்புக்கொள்ளவேண்டும். விவாகம்செய்துகொள்ளாமலிருப்பது உத்தமதர்மமென்று நினைத்துக்கொண்டா ஸுப்ரூ விவாகம் செய்துகொள்ளவில்லை? தனக்கு அனுகுண